நீதிமன்றம் ஆகிய மூன்று நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அரக்கோணம் நகரிலே ஒரு விரைவு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென வழக்கறிஞர்களும், பொது மக்களும் கோரிக்கை வைத்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரக்கோணம் நகரிலே ஒரு விரைவு நீதிமன்றத்தை அமைத்துத் தருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சிலே விரைந்து வழக்குகளை முடிக்க 170 புதிய நீதிமன்றங்களும், இன்னும் கூடுதலாக இந்த வருடம் 44 புதிய நீதிமன்றங்களும் ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நீதிமன்றத்திற்கு உயர் நீதிமன்றத்திலிருந்து அம்மா அவர்களுடைய அரசுக்கு செயற்குறிப்பு வரும்பட்சத்தில், கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 357, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

357—

கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம்

***5698—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 28]

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவிலிலுள்ள கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே எங்களுடைய கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஆடுகள் முதல் ஆம்புலன்ஸ் வரை அனைத்தும் வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆவுடையார்கோவிலிலுள்ள கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எங்களுடைய கால்நடை பராமரிப்புத் துறைக்கு இல்லை என்பதே இல்லை என்கின்ற வகையிலே, புதியதாக அந்த மருந்தகம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று, 22 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்டுள்ளது. கட்டடம் கட்டும் பணிகள் விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சத்தில் கிடந்த தமிழகத்தை, தனது அயராத உழைப்பால் அனைத்துத் துறைகளையும் உச்சத்தில் நிறுத்தி, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, உலக முதலீடுகளை தாய் தமிழகத்திற்கு ஈர்த்து வந்த வெற்றித் தாயே, வீரத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நான் வணங்கும் குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

[2015 செப்டம்பர் 28

அம்மா! மானிடராய் பிறந்த மனித குலத்திற்கு மட்டும் நீங்கள் தாயல்ல; வாய் இல்லா ஜீவன்களை வாழ வைப்பதற்காக இந்தியாவிலேயே முதன்முறையாக நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வாயில்லா ஜீவன்களுக்கும் தாயாக இருந்து வாழ வைக்கின்ற வாழும் மனித தெய்வம் அம்மா நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்காளப் பெருமக்கள் வாக்கு அளித்துவிட்டு வருகின்றபொழுது, அவர்களது விரல் நுனியில் வைக்கின்ற அடையாள மை அழிவதற்கு முன்பாகவே, தான் சொன்ன தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நான் இந்த மன்றத்திலே கேள்வியைக் கேட்பதற்கு கேள்வித் தாளில் எழுதிய என் பேனா மை காய்வதற்கு முன்பாகவே, அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவிலில் புதியதாக கால்நடை மருந்துவமனை அமைப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளை பொற்பாதங்களில் சமர்ப்பித்து, நாளும் பொழுதும் மட்டுமல்ல; என் ஆயுட்காலம் முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கக்கூடிய நன்றியுடையவனாக இருப்பேன் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதியதாக கால்நடை மருத்துவமனையை அறிவித்திருக்கிறார்கள். அறந்தாங்கி தொகுதியிலே மேலும் இரண்டே இரண்டு கால்நடை மருத்துவமனையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிறைவேற்றினால் தன்னிறைவு பெற்ற தொகுதியாக அது இருக்கும். எனவே, அதை நிறைவேற்றித் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

2015 செப்டம்பர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடைக் கிளை நிலையம் தேவைப்படுகின்ற அந்தக் கிராமத்தைக் குறிப்பிட்டுச் சொல்வாரென்று சொன்னால், அந்தக் கிராமத்தை ஆய்வு செய்து, அரசின் விதிகளுக்குட்பட்டு இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளுக்குட்பட்டு அறந்தாங்கி ஒன்றியம், புதுவாக்கோட்டை என்கின்ற பகுதியிலே அனைத்து உள்கட்டமைப்புகளும் உள்ளதோடு, கால்நடைகளும் அதிகமாக உள்ளன. அதேபோன்று, மணல்மேல்குடி ஒன்றியத்திலே பெருமருதூர் என்ற பகுதியிலேயும், அரசு விதிகளுக்கு உட்பட்டு கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன. மக்கள் நீண்ட தூரத்திற்குச் சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை பெற வேண்டியிருப்பதால், இந்த இடங்களை நான் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சென்று, இந்த ஆண்டே இதை நிறைவேற்றித் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கிராமம் அரசு விதிகளுக்குட்பட்டு இருக்கிறது என்று தெரிவிப்பதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அங்கே புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முற்பகல் 10—20

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட, திருப்பனந்தாள் ஒன்றியம், குறிச்சி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் வேண்டுமென்று வேண்டுகோள் வைத்து, அதன் பின்னர் அதற்கான கட்டடப் பணிகள் எல்லாம் முடிந்து, 7 மாத காலத்திற்கு முன்னால் அந்தக் கால்நடை கிளை நிலையத்தின் திறப்பு விழா முடிவு செய்யப்பட்டு மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பாரதி மோகன் அவர்கள் அதைத் திறப்பதாகவும், திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் குத்துவிளக்கு ஏற்றி வைப்பதாகவும் இருந்தது. ஏதோ தெரியவில்லை; மாலை நான்கு மணியளவில் கால்நடைத் துறை அதிகாரிகள், "நிகழ்ச்சி இன்று இரத்தாகிவிட்டது; பாராளுமன்ற உறுப்பினருக்கு வேறு பணிகள் இருக்கின்ற காரணத்தால், வேறு ஒரு தேதியில் அது திறக்கப்படும்" என்று சொன்னார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுவெல்லாம் நிருவாகம் சம்பந்தப்பட்டது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *ஓரே ஒரு நிமிடம். 7 மாத காலமாகியும் திறக்கப்படாத அந்தக் கால்நடை மருத்துவமனையை, மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் திறந்து வைக்க முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஒருவேளை மருத்துவர்கள் இல்லாத நிலையில் அதற்கான திறப்பு விழா நிறுத்தப்பட்டிருக்கிறதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கட்டப்பட்டிருக்கின்ற*

2015 செப்டம்பர் 28]

கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் அத்துணையும் மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் மட்டுமே திறக்கப்படும். கடந்த மாதம்கூட ஏறக்குறைய 300—க்கும் மேற்பட்ட கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கால்நடை மருந்தகம் குறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 358, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

358—

ஜவுளிப் பூங்கா

***47281—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வறியா உழைப்பில் உயர்ந்த உத்தமர், அன்பு, அறிவு, துணிவு என பன்முகப் பண்புகளை ஒருங்கே கொண்டு தமிழக மக்களைக் காத்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு ஜவுளித் தொழிற் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று வினா எழுப்பியிருக்கிறார்கள். தொழிற்பூங்காக்களை, அதாவது ஜவுளிப் பூங்காக்களை தனியார் யார் அமைக்க முன்வருகின்றார்களோ, அவர்களுக்கு அரசு உதவி செய்யக்கூடிய சூழ்நிலை இதுவரை இருந்து, 15 தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதிலே தமிழக அரசின் மானியமாக 9 சதவிகிதம் முதலீட்டிலே வழங்கப்படும். மத்திய அரசின் மானியமாக 49 சதவிகிதம் வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்